
பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை 13.04.2025 கதிர் 156

### இது ரகசியம் அல்ல!



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விசாரணைக்கு வரும்படிலஞ்சம்,ஊழல்ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது. ஆணைக்குழுவில் முற்பட்டு 2

# ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக எல்லோரும் ஐக்கியப்படவேண்டும்

## தமிழர்களுக்கு அயலுறவுத்துறை அமைச்சர் அழைப்பு

நாங்கள் எல்லோரும் ஐக்கியப் படவேண்டும். ஏனெனில் நாங்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளே. எங்களுக்குள் பேதங்கள் இல்லாமல் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஐக்கியத்துடன் வாழ வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத்.

உள்ளாட்சித் தேர்தல் பரப்புரைகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்புமற்றும்சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், யாழ்ப்பாண வர்த்தகர்களை இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்த அமைச்சர் விஜித ஹேரத் தேர்தல் பரப்புரைக்கூட்டங்கள்உள்ளிட்டபல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார். மதியம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் யாழ்ப்பாண வர்த்தகர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா, தேசிய மக்கள்சக்தியின்யாழ்ப்பாணமாநகரசபை முதன்மை வேட்பாளர் கபிலன் மற்றும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வர்த்தகர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

வலிகாமம்மேற்குபிரதேசசபைக்கான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அறிமுகமும் மக்கள் சந்திப்பும் நேற்று சித்தன்கேணியில் இடம்பெற்றது.

சித்தன்கேணி மஹா கணபதிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்விலும் அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் ,நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன்,றஜீவன்,ஸ்ரீபவானந்தராஜா வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் விஜித ஹேரத் தனக்கும் கொஞ்சம்கொஞ்சம்தமிழ்தெரியும்எனக் கூறிபலஇடங்களிலும்சிறிது நேரம் 2

# ஊழல், மோசடி தொடர்பில் திடீர் சோதனைக்கு முடிவு

## கோப் குழு அதிரடி நடவடிக்கை

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் அதிகமாக உள்ள சந்தேகத்திற்குரிய நிறுவனங்களில் திடீர் சோதனைகளை நடத்தி அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்க பொது நிறுவனங்கள் மீதான நாடாளுமன்றக் குழு (ஸீநுஊணசி) முடிவு செய்துள்ளது.

இந்தக்குழுவின்உறுப்பினர்கள்சமீபத்தில்கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்றுஅங்குஒருதிட்டத்தின்முன்னேற்றத்தைக்கவனித்தனர்.

கோப்குழுவின்தலைவர்நிஷாந்தசமரவீரதலைமையிலான குழு அங்கு சென்ற குழுவினர், அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பான விசாரணையை விரைவுபடுத்துவது என முடிவு செய்தனர்.

# சிங்கள தேசியத்திற்குள் தமிழர்களை கரைப்பதற்கே ஜேவிபி முயற்சிக்கிறது

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் நேரடிக் குற்றச்சாட்டு

**அண்மையநாள்களாகவடக்குகிழக்கிற்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு ஜேவிபி அமைச்சர்கள்படையெடுத்துவருகின்றார்கள். அவர்களிடம் நான் கேட்கவிரும்புவது கடந்த 75 வருடங்களுக்கு மேலாக தேசிய இனப் பிரச்சனைக்காகப் போராடி வரும் தமிழ் மக்கள் தொடர்பாக ஜே.வி.பினுடைய நிலைப்பாடுஎன்ன? தமிழ்மக்களைசிங்களத் தேசியத்துக்குள் கரைப்பதற்கே அவர்கள் முற்படுகிறார்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம்பேசும்போதுஇதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**அண்மைக் காலமாக ஆளும்தரபபு அமைச்சர்கள்வடக்கு,கிழக்கிற்கு-குறிப்பாக யாழ்ப்பாணம் நோக்கி - படையெடுத்து வருகின்றார்கள். ஒன்றன் பின் ஒன்றாக இங்கு வந்து அரசியல் செய்கிறார்கள். ஆலயங்களுக்குமுன்னால்மேடைஅமைத்து கூட்டங்களையும் நடத்துகிறார்கள். இது பொருத்தமானது அல்ல. தேர்தல் விதி முறைகளுக்கு மாறானது.**

**ஜே.வி.பியை பொறுத்தவரையில் கடந்த பத்து வருடங்களாக எனக்கு** 2

# கூரை சோலர்களை நிறுத்திவைக்க கோரிக்கை

வீட்டுக்கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின் உற்பத்தித் தொகுதிகளை (சோலர்கள்) இன்று முதல் ஏப்ரல் 21வரையும் நாளாந்தம் பிற்பகல் 3 மணிவரை நிறுத்தி வைக்குமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

நீண்ட விடுமுறை மற்றும் நிலவும் அதிக வெயில் காலநிலை காரணமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாக, களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தின் தலைமைப்பொறியாளரும்,இலங்கைமின்சார சபை ஊடக செய்தித் தொடர்பாளருமான பொறியாளர் தம்மிகே விமலரத்ன ஒரு ஊடக அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். தேசிய மின்சார தேவை மிகக் குறைந்துள்ளது, அதேநேரத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (ஙயூசி) மூலங்களிலிருந்து கிடைக்கும் அதிக பங்களிப்பு தேசிய மின்சார கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நிலைமை மின் கட்டமைப்பின் அதியுயர்மார்க்க(கிறிட்)கட்டமைப்பைசெயலற்ற தன்மைக்குத் தள்ளுகின்றது. இதனால் கிறிட் கட்டமைப்புதிடீர்இடையூறுகளுக்குஉள்ளாகும் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. விநியோகம் அல்லது தேவையில் ஏற்படும் சிறிய ஏற்ற இறக்கங்கள்கூட இலங்கையின் ஒரு பகுதியில் அல்லது முழு நாட்டுக்கும் மின் தடையை ஏற்படுத்த வழிவகக்கூடும்.

எனவே இந்தக் காலகட்டத்தில் தேசிய மின்சார கட்டமைப்பின் 2

# தேசபந்துவுக்கு எதிரான விசாரணைக்கு ஆள்களை நியமிக்க சபாநாயகர் பணிப்பு

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைவிசாரிக்கும்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்குமாறு சபாநாயகர் பிரதம நீதியரசர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நிலையியற் கட்டளைகளின்படி, தலைமை நீதியரசர் இந்தக் குழுவிற்கு ஒரு நீதியரசரை நியமிக்கவேண்டும், அதேபோல் தேசிய காவல் ஆணையத்தின் தலைவர் மற்றும் பிரதமர்மற்றும்எதிர்க்கட்சித்தலைவரால் பரிந்துரைக்கப்படும் ஒருவரும் இந்தக் குழுவிற்கான உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும்.

உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டதும் இந்தக்குழுவினர் அடுத்த வாரம் தனது 2

# விமானத்தில் பெண்ணிடம் தவறாக நடந்துகொண்ட இந்திய விமானி

## கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கைது

துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில்பெண்பயணிஒருவரை பாலியல்ரீதியில்துன்புறுத்தியஇந்தியர் விமானி ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 31 வயது பெண் ஒருவரிடமே 2

# கைதான பிள்ளையானுக்கு 90 நாள்கள் தடுப்புக் காவல்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான்எனப்படும்சந்திரகாந்தனை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான 90 நாள் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

2006ஆம்ஆண்டுகிழக்குமாகாணத் தில் பல்கலைக்கழக துணைவேந்தர் காணாமல்போனது தொடர்பான விசாரணை தொடர்பாக, ஏப்ரல் 8 இரவு மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்துப் பிள் ளையான்கைதுசெய்யப்பட்டார். 2

# சமூக ஊடங்களில் பொய் பரப்புகின்றனர் ஜனாதிபதி கிண்ணியாவில் குற்றச்சாட்டு

(ஹஸ்பர்)

பலர் சமூக ஊடகங்களில் பொய் பரப்புகின்றனர். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரனைகளை ஆரம்பித்துள்ளோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபை மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவே எமது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புச் செயற்படுகிறது கடந்த காலங்களில் திகன, மாவனல்லை என பல பிரச்சினைகள் உருவாகின. ஆனால் தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறி ஆறு மாதங்களாகிய நிலையில் அவ்வாறானபிரச்சினைகள்இல்லாமல்வாழ்கிறீர்கள். இதற்காக அனைவரும் நாட்டை கட்டியெழுப்ப ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டியுள்ளது. எனவேதான் இந்தமுறை தேர்தலில் கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபை அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குங்கள். 2

## இனி இது .....

வாக்குமூலம் வழங்குவதில் தனக்கொரு பிரச்சினையும் இல்லை என்பதாக ஊடகங்களுக்கு 'தில்'லாக உடனடி 'ஸ்டேட்மென்ட்' கொடுத்த ரணில், பின்னர் மெல்லப் பின்னடித்திருக்கிறார் என்று தகவல்.

ஏப்ரல் 17 அவரை விசாரணைக்கு வருமாறு ஆணைக்குழு ரணிலுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதாவது சித்திரைப் புத்தாண்டு முடிந்து மூன்று நாள்களின் பின்னர், புத்தாண்டு விடுமுறைகள் தீர்ந்து அரச பணிகள் மீண்டும் முழுவீச்சில் தொடங்கும் நாளில் விசாரணைக்கு வருமாறு ரணில் கோரப்பட்டிருந்தார். ஆனால், புத்தாண்டு விடுமுறைக்காகத் தானும் தனது வழக்கறிஞர்களும் கொழும்புக்கு வெளியே செல்வதால் அந்தத் தினத்தில் தன்னால் விசாரணைக்குச் சமூகமளிக்க முடியாது என்றும் அதனால், தனக்குப் பிறிதொரு தினத்தை ஒதுக்கித் தருமாறும் ரணில் ஆணைக்குழுவிற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

முதலில் விசாரணையை எதிர்கொள்வேன் என்ற 'தில்' ஏன் திடீரெனச் சுருதி குறைந்தது என்று தெரியவில்லை. அவரது கோரிக்கையை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இனி அவருக்கு ஏப்ரல் 23க்குப் பின்னர் ஒரு நாள் விசாரணைக்குத் திகதியிடப்படும் என்று தெரிகிறது. அந்த நாள் நேற்றுவரையில் இறுதி செய்யப்படவில்லை. ஆனால், ஏப்ரல் 23க்குப் பின்னர் ஒரு நாளை ரணிலுக்கான விசாரணைக்கு ஒதுக்குவது என்று மட்டும் ஆணைக்குழு முடிவு செய்திருப்பதாக அறியவந்தது.

.........................................

ஆளும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்ததும் வழங்கிய அமைச்சரவை நியமனங்கள் மற்றும் அமைச்சுப் பதவிகளில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்களுக்கு எந்த நியமனங்களும் வழங்கப்படவில்லை என்ற விமர்சனங்கள் கிளம்பின. முன்னர் வடக்கைச் சேர்ந்தவரான டக்ளஸ் தேவானந்தா வசம் இருந்த மீன்பிடித்துறை அமைச்சைக்கூட யாழ்ப்பாணத்திற்கான தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளராக இருக்கும் சந்திரசேகரனுக்குத்தான் வழங்கியதே தவிர, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்பதும் அந்த விமர்சனங்களில் அடங்கியிருந்தது. அதாவது சிங்களவர்களுக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டபோதும் ஈழத் தமிழர்களும் முஸ்லிம்களும் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதே அதன் பொருளாக இருந்தது.

வடக்கில் இருந்த 6 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தபோதும் அவர்களில் ஒருவருக்குக்கூட பிரதி அமைச்சர் பதவிகூட வழங்கப்படவில்லை என்கிற விமர்சனங்களும் எ--ழுந்தன. அப்போது அதற்குப் பதலளித்த தேசிய மக்கள் சக்தி தாம் இன, மத அடிப்படையில் தமது ஆளும்தரப்புச் செயற்படவில்லை, செயற்படப்போவதுமில்லை என்று பதலளித்தார்கள். அமைச்சர்கள் இந்தப் பதிலை உரக்கச் சொன்னார்கள். தமது அமைச்சர்கள் எல்லா மக்களுக்கும் பொதுவானவர்கள் என்கிற பொத்தம் பொதுவான கருத்தையும் எடுத்து வைத்தார்கள்.

ஆனால், நேற்றுக் கிண்ணியாவில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, இதற்கு எதிர்மாறான கருத்தைத் தெரிவித்திருக்கிறார். "அம்பாறையில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவானார்கள். நால்வரும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதனைக் கருத்திற்கொண்டு தேசிய மக்கள் சக்தி கட்சி தீர்மானத்துக்கு அமைவாக ஆதம்பாவை தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்கினோம். அதன் --மூ-லம் முஸ்லீம் சமூகத்தைக் கௌரவப்படுத்தியுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார்.

''இதைத்தானே தமிழர்களும் அமைச்சரவை நியமனத்தில் குத்திக்காட்டினோம்'' என்கிற நிலைமை ஈழத் தமிழர்களுக்கு. ஆதம்பாவாவின் நாடாளுமன்ற நியமனம் தேசிய மக்கள் சக்தியின் இன அடிப்படையிலான நியமனம். அப்படியிருக்கும்போது இன, மத அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி செயற்படாது என்பதன் அர்த்தம் என்ன. அம்பாறையில் மட்டுமல்ல வவுனியாவிலும் தேசிய மக்கள் சக்தி அப்படித்தான் செயற்பட்டது. அங்கு தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழர்கள் என்பதால் ஒரு சிங்களவருக்கு தேசியப் பட்டியலில் நியமனம் வழங்கியது தேசிய மக்கள் சக்தி. அப்படியென்றால் அம்பாறையில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களுக்காகவும் வவுனியாவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்களவர்களுக்காகவும் செயற்படமாட்டார்கள், அவரவர் இனங்களைச் சேர்ந்தவர்களே அவரவர் இனங்களுக்காகச் செயற்படுவார்கள் என்று தேசிய மக்கள் சக்தி பொருள் கொள்வதாகத்தானே அர்த்தம். அதென்ன அமைச்சரவை நியமனத்தின்போது மட்டும் வசதியாக அந்தக் கொள்கையைப் புறக்கணித்துவிட்டீர்கள்? ஏமாற்றுவதற்கும் ஒரு அளவு கணக்கு வேண்டாமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்தவகையில் இங்கு வந்து போனவர்கள் தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்கவும் தற்போதைய சபை முதல்வர் பிமல் ரத்னாயக்கவும் மட்டுமே. ஆனால் இப்போது அதிகார தோரணையில் - ஏகாதிபத்திய சிந்தனையில் - கடந்த கால ஆட்சியாளர்கள் மற்றும் பெரும்பான்மைக் கட்சிகளின் மனோபாவத்தில் இங்கே வந்து தமிழ் மக்களிடம் பழகி விட்டுப்போகலாம் என்று செயற்படுகின்றனர் எனத் தெரிகிறது.

அவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் அவ்வாறே இருக்கிறது. படையினர் வசம் இருக்கும் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

குறிப்பாக நான் அரசாங்கத்தை பார்த்து கேட்க வேண்டிய முக்கியமான ஒரு கேள்வி உண்டு. தமிழ் மக்கள் கடந்த 75 வருடங்களுக்கு மேலாக ஒரு தேசிய இனப் பிரச்சனைக்காகப் போராடி வருகின்றனர். தமிழ் மக்கள் தொடர்பாக ஜே.வி.பினுடைய நிலைப்பாடு என்ன? தமிழ் மக்களை (சிங்கள) தேசியத்துக்குள் கரைப்பதற்கே அவர்கள் முற்படுகிறார்கள்.

இங்குள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது எங்களுடையது. அதை மறந்து இங்கு போட்டியிடுவது என்பது ஏகாதிபத்திய சிந்தனை என்பதை நீங்கள் உணரவில்லையா?

அதிலும் இங்கிருக்ககூடிய அனுபவஸ்தர்கள், தெரிந்தவர்களை மழுங்கடித்து, அதிகாரத்தினுடைய எல்லைகளை உச்சமாகக்கொண்டு அவர்கள் செய்வது பொருத்தமானவையல்ல என்பதை ஏற்றுக்கொண்டு மக்களிவர்களை மறுதலிக்கவேண்டும். மாயைகளில் மக்கள் சிக்காமல் இதை புரிந்துகொள்ளவேண்டும். இலங்கை தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசியத்துடனேயே நிற்கிறோம் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் - -என்றார்.

## கூரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைப் பராமரிக்க உதவுவதில் அனைத்து சூரிய மின்சக்தி அமைப்பு உரிமையாளர்களின் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## விமானத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தவறாக நடந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அந்தப் பெண் துபாயில் ஒரு காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரிந்தார். அவர் இன்று துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு ஃபிட்ஸ் ஏர் விமானம் வந்துகொண்டிந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விமானி தன்னைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்று அந்தப் பெண் செய்த முறையீட்டை அடுத்து விமான நிலையத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரம் தொடர்பாக விமானப் பணியாளர்களிடம் இருந்தும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

மேலும் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் இந்திய விமானி இருவரும் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இந்திய விமான கப்டனை நீதிமன்றத்தில் நிறுத்த உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒரு தாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மொழியிலேயே உரையாற்றியிருந்தார்.

"யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள நான் இங்கு தமிழில் பேசவே விரும்புகிறேன். எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும். ஆகையினால் தமிழில் கொஞ்சம் உரையாற்றிவிட்டு தொடர்ந்து சிங்களத்திலும் கதைக்கிறேன். நாங்கள் சந்தர்ப்பவாதிகள் இல்லை.

எங்களுக்கு இன, மத, சாதி பேதமில்லை. நாங்கள் எல்லோரும் ஐக்கியப்படவேண்டும். ஏனெனில் நாங்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளே. எங்களுக்குள் பேதங்கள் இல்லாமல் ஒருதாய் பிள்ளைகளாக ஐக்கியத்துடன் வாழ வேண்டும்" என்றார்.

## தேசபந்துவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையை தொடங்குவர் என்று அறியப்படுகிறது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு குழுவை நியமிக்கும் தீர்மானம் ஏப்ரல் 8 நாடாளுமன்றத்தில் 151 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

விசாரணையை முடித்த பிறகு, இந்தக் குழு சபாநாயகரிடம் முழு அறிக்கையையும் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளது, மேலும் அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் முன்மொழியப்படும்.

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகவே அவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை முன்பு அவரிடம் விசாரணை நடத்தியது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பாக பிள்ளையான் கைது செய்யப்பட்டு சிறிது காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

## சமூக ஊடங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலர் சமூக ஊடகங்களில் பொய் பரப்புகின்றனர். இவர்களைப் பார்த்தால் பின்னால் மரம் உள்ளது. அம்பாறையில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவானார்கள். நால்வரும் சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்கள். இதனைக் கருத்திற்கொண்டு தேசிய மக்கள் சக்தி கட்சி தீர்மானத்துக்கு அமைவாக ஆதம்பாவை

தொடர்ச்சி 5 ம் பக்கம்.....



காலைக்கதிர் Kalaikkathir

# பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புக்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க வழிகோலும்

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்தல்

பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை எனவும், அவை தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் உருவாவதற்கு வழிவகுக்கிறது எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பொலிஸ் நிலையத்திலோ அல்லது சிறைச்சாலையிலோ இடம்பெறும் காவலின் கீழான உயிரிழப்புக்கள் தொடர்பில் சுயாதீன அதிகாரிகளால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ்காவலின்கீழ் வைக்கப்பட்டிருந்த சத்சர நிமேஷ் என்ற இளைஞர் கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்த நிலையில், அவர் பொலிஸாரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார் எனவும், அவரது உடலில் கடுமையான காயங்கள் இருந்தன எனவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளடங்கலாக மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுபற்றி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிக்கையில் -

கடந்த 2 ஆம் திகதி பொலிஸ்காவலின்கீழ் பதிவான சத்சர நிமேஷின் உயிரிழப்பு, கடந்த பல ஆண்டுகளாகப் பதிவாகிவரும் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புச் சம்பவங்களின் பட்டியலில் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறது.

அதுமாத்திரமன்றி இச்சம்பவமானது இலங்கையின் பொலிஸ் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் சந்தேகநபர்கள் மற்றும் கைதிகள் எத்தகைய மோசமான, மனிதாபிமானமற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை மீண்டுமொரு முறை உணர்த்துகிறது.

இருப்பினும் உயரதிகாரத்தில் இருப்பவர்களால் இந்த உண்மையை உணரமுடியவில்லை அல்லது அவர்கள் உணர மறுக்கிறார்கள்.

பொலிஸ் நிலையத்திலோ அல்லது சிறைச்சாலையிலோ இடம்பெறும் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் தொடர்பில் சுயாதீன அதிகாரிகளால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாறாக அத்தகைய சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கும்போது, சில மணித்தியாலங்களின் பின்னரோ அல்லது சில நாள்களின் பின்னரோ குறித்த சம்பவம் பற்றிய விசாரணைகளை குற்றப்புலனாய்வுப்பிரிவினிடம் ஒப்படைப்பதால் எவ்வித பயனுமில்லை.

ஏனெனில் அவ்வேளையில் பெருமளவான ஆதாரங்கள் அழிக்கப்பட்டோ அல்லதுசாட்சியங்கள் சிதைக்கப்பட்டோ இருக்கக்கூடும். அதுமாத்திரமன்றி பொலிஸ்காவலின் கீழிருந்த பிறிதொரு நபர் அச்சம்பவத்தைப் பார்த்திருந்தாலும், அவர் தனது பாதுகாப்பு குறித்த அச்சத்தின் காரணமாக சாட்சியமளிக்க முன்வருவது மிகக்கடினமானதாகும்.

கடந்த பல ஆண்டுகளாக பெரும் எண்ணிக்கையானோர் பொலிஸ் மற்றும் சிறைச்சாலைக் காவலில் உயிரிழந்திருக்கின்றனர். இருப்பினும் அச்சம்பவங்கள் தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிக அரிதாகும்.

மேலும் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை என்பதையும், அவை தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் உருவாவதற்கு வழிவகுக்கின்றன என்பதையும் பெரும்பாலானோர் புரிந்துகொள்வதில்லை எனக் கவலை வெளியிட்டுள்ளார்.

# மன்னார் மற்றும் பூநகரியில் கண்டல் தாவர மீள் நடுகை

உலகளாவிய சூழலியல் வசதி (Global Environmental Facility) எனும் செயல் திட்டத்தின் கீழ், கடலோர கண்டல் தாவரங்களின் வளர்ச்சி ஊடாக சூழலை பாதுகாக்கும் முகமாக கண்டல் தாவரங்கள் நாட்டும் செயல்பாடு கிளிநொச்சி, பூநகரி மற்றும் மன்னார் கீலிக்கரையான் பிட்டி சதுப்பு நிலப் பகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

GEF/SGP/UNDP நிறுவனத்தின் நெறிப்படுத்தலின் கீழ் ினிinistry of Crab நிறுவனத்தின் நிதியுதவியுடன், மன்னார்,










அடம்பன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் முதல் கட்டமாக கண்டல் தாவர கன்றுகள், வெள்ளிக்கிழமை மாலை வைபவரீதியாக நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் UNDP நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் டிலிஸா, Ministry of Crab நிறுவனத்தின் உத்தியோகத்தர் சமூகம் சுமுகன் சர்மா தலைமையிலான குழுவினர் மற்றும் UNDP இன் மன்னார் மாவட்ட கள இணைப்பாளர் ஜெயவதனி மற்றும் அறிவு முகாமைத்துவம் பகுதி திட்ட இயக்குனர் தர்மலிங்கம் கணேஸ், உட்பட We Can அமைப்பின் பிரதிநிதிகள் கீலியன் குடியிருப்பு மற்றும் வேட்டையான் முறிப்பு மீனவ அமைப்பு பிரதிநிதிகள், வனவள திணைகள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த செயற்திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்ட கரையோரப் பகுதிகளில் சுமார் 7500 கண்டல் தாவரங்கள் நடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ஹரிணி மன்னார் வருகை

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று (சனிக்கிழமை) மதியம் மன்னாருக்கு விஜயம் செய்த நிலையில் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.





தேசியமக்கள்சக்தியின் நானாட்டான் பிரதேச சபை வேட்பாளர்களை ஆதரித்து நேற்றைய தினம் (சனிக்கிழமை) மதியம் நானாட்டான் பிரதான மண்டபத்தில் வேட்பாளர் அறிமுக கூட்டம் இடம் பெற்றது.

இந்த கூட்டத்தில் தேசிய மக்கள்சக்தியின்வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு வேட்பாளர்களை ஆதரித்து உரை நிகழ்த்தினர்.

மேலும், இந்த கூட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதமரின் நானாட்டான் பகு திக்கான விஜயத்தையொட்டி நானாட்டான் பகுதியில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப் பட்டு இருந்தமை குறிப் பிடத் தக்கது.

# பண்டிகைக் காலப் போக்குவரத்து தகவலறிய தொலைபேசி எண்கள்

பண்டிகை காலத்தில் போக்குவரத்து சேவைகள் தொடர்பில் தகவல் அறிந்துகொள்ளுவதற்கு அவசர தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கங்கள் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, போக்குவரத்து சேவைகள் தொடர்பில் தகவல் அறிந்துகொள்ளுவதற்கு தேசியபோக்குவரத்து ஆணைக்குழுவின் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0712 595 555 என்ற வாட்ஸ்அப் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும்.

மேலும், பஸ் சேவைகள் தொடர்பில் தகவல் அறிந்துகொள்ளுவதற்கு 1958 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கும், ரயில் சேவைகள் தொடர்பில் தகவல் அறிந்துகொள்ளுவதற்கு 1971 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்பு கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் காலத்தில் மட்டுமல்லாது அடிக்கடி வந்து துயரை கேளுங்கள்

கடந்த சில நாட்களாக வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு கொழும்பு அமைச்சர்கள் படையெடுத்து வருகின்றார்கள். உள்ளாட்சித் தேர்தல்நேரத்திலாவது தேசியமக்கள்சக்தியின்சிங்களஅமைச்சர்களுக்கு வடக்கிலும் மக்கள் இருக்கின்றார்கள் என்பது ஞாபகத்திற்கு வருவது மகிழ்ச்சிக்குரியதே. ஏனெனில் அவர்களின் தமிழ் அமைச்சர்களில் ஒருவரான கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலேயே இருக்கிறார். எனவே வருகை தருபவர்கள் பெரும்பாலும் சிங்கள அமைச்சர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கும் இங்குள்ள மிகப் பின்தங்கிய இடங்களை நேரில் பார்ப்பதற்கும் அங்குள்ள மக்களின் அவலங்களைத் தெரிந்துகொள்வதற்கும் ஒரு வாய்ப்பை இந்தத் தேர்தல் தந்திருப்பதையிட்டு வரவேற்கத்தான் வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியோ அதன் முதுகெலும்பான ஜேவிபியோ இந்தத் தேர்தலுக்கு முன்னர் ஈழத் தமிழர்கள் பகுதிகளில் செயற்பட்ட ஓர் அரசியல் அமைப்பல்ல. இன்னும் சொல்லப்போனால் போர்க் காலத்தில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொள்கைகளையே தனது அரசியல் பலமாகக் கொண்டிருந்த ஒரு கட்சி. எதிர்பாராத வகையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் மக்கள் அந்தக் கட்சிக்கு வாக்களிததைத் தொடர்ந்து இந்தத் தேர்தலில்தான் அவசர அவசரமாக ஏதோ ஈழத் தமிழ் மக்களையும் அவர்கள் அறிந்து கொள்வதற்கும் தெரிந்து கொள்வதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஈழத் தமிழர்களின் அரசியல் விருப்புக்களையும் கேட்கின்ற அளவில் அவர்களின் காதுகள் திறந்தால் இன்னும் மகிழ்ச்சிதான்.

இந்தத் தேர்தலிற்கு காரைநகரிற்கு வரப்போய்த்தான் தலைமை அமைச்சர் (பிரதமர்) ஹரினிக்கு அந்தக் இடத்தைப் பற்றி முதல் தடவையாகத் தெரியவந்திருக்கின்றது. அங்கு முன்னர் 80 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இருந்தார்கள் என்பதும் இப்போது 10 ஆயிரம் பேர் வரையிலான மக்களே இருக்கின்றார்கள் என்பதும் தெரியவந்திருக்கின்றது. ஆனால், எஞ்சியவர்கள் வியாபராத்திற்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பணத்தைத் தேடியும் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று யாரோ அவருக்கு தவறாக எடுத்து விளக்கியிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால் போர்தான், இலங்கைப் படைகளின் ஆக்கிரமிப்புத்தான் அந்த இடங்களை விட்டு மக்களை வெளியேறப்பண்ணியது. இன்னும் ஆழமாகக் காரைநகரைப் பற்றி தலைமை அமைச்சர் ஹரினி தெரிந்துகொள்ள முயன்றாரானால் பல உண்மைகளை அறியமுடியும்.

யாழ்ப்பாணத்திலேயே தீவக மக்கள் தமது மண் மீதும் பாரம்பரியம் மீதும் அதிக பற்றுறுதி கொண்டவர்கள். அவர்கள் வேலை வாய்ப்புக்காகவும் வசதிகளுக்காகவும் உலகின் எந்தப் பகுதிகளுக்குச் சென்றாலும் தமது மண்ணைமறப்பவர்கள்அல்லர். அதனைவளர்ப்பதிலும்வளம்படுத்துவதிலும் அதீத அக்கறையும் பற்றும் கொண்டவர்கள். அந்த நிலையிலிருந்து அவர்களை விலக்கி மண்ணோடான தொடர்பை அறுத்தது 1990களில் இலங்கைப் படையினர் தீவகத்தை கைப்பற்றிய படை நடவடிக்கைதான். அன்று தீவகத்திலிருந்து அடியோடு பெயர்க்கப்பட்ட மக்கள் இன்னும் அங்கு மீளமுடியாமல் இருக்கிறார்கள்.

இந்த உண்மைகளுக்கு வெளியே காரைநகருக்கு வரப்போய்தான் கல்வி அமைச்சராக ஹரினிக்கு அங்குள்ள மக்களும் பிள்ளைகளும் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பது தெரியவந்திருக்கின்றது. அவர் ஒரு கல்வியிலாளர், அரசியல் செயற்பட்டாளர். ஆனால் இதுவரையில் அவருக்கு காரைநகர் போன்ற வடக்கு கிழக்கின் கிராமப்புற மாணவர்களின் பிரச்சினைகள் தெரிந்திருக்கவில்லை, இந்தத் தேர்தலுக்கு வரப்போய்தான் அவை தெரியவந்திருக்கின்றன. எனவே ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை தேர்தலை முன்னிட்டேனும் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் தெரிந்துகொள்ள முற்படுவது நல்லதுதான்.

மற்றொரு அமைச்சரான விஜித ஹேரத் இந்த உள்ளாட்சித் தேர்தலில்தான் தமிழில் பேச விருப்பப்பட்டிருக்கின்றார், பேச முயன்றும் இருக்கிறார். நல்லது தேர்தலுக்காக என்றாலும் சிங்கள அமைச்சர்கள் தமிழைக் கற்றுகொள்ள முயற்சிப்பது தமிழர்களின் பிரச்சினைகளை அரசியல் விருப்பங்களை நேரில், அடுத்தவர் துணை இன்றி, குறிப்பாக அமைச்சர்களைச் சுற்றியுள்ள சுயநலவாதிகளைக் கடந்து ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்கு உதவும். தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் எழும்போது மட்டும் அமைச்சர்கள் காதுகளைப் பொத்திக்கொள்ளாத வரைக்கும் அவர்கள் தேர்தல்களுக்காகவாவது வடக்கு கிழக்குப் பகுதிகளை நேரில் வந்து பார்த்து மக்களின் சிரமங்களை அறிந்துகொள்வது சிறப்பானதுதான்.

இருந்தாலும் தேர்தலின்போது மட்டும் வராமல் ஆண்டுக்கொரு முறை என்றாலும் எல்லா அமைச்சர்களும் முறைவைத்து வடக்கு கிழக்கிற்கு வந்து பின்தங்கிய கிராமங்களிற்குச் சென்று மக்களின் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்போது அமைச்சர்கள் சென்றிருக்கும் இடங்களில் பல, இதற்கு முன்னர் இருந்த அமைச்சர்கள் செல்லாத இடங்களாக இருக்கலாம். ஆனால், தேசிய மக்கள் சக்தியால் இன்றுவரையில் ஊடுருவ முடியாத இன்னும் பல மிக மோசமான கிராமங்கள் யாழ்ப்பாணத்திலும் வடக்கு கிழக்கு முழுவதிலும் உள்ளன. அமைச்சர்கள் அந்தக் கிராமங்களுக்கும் செல்லவேண்டும். காரைநகரின் வசதியையே கண்டு கண்ணீர் விடும் தலைமை அமைச்சர் இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் சென்றால் குருதியைக் கண்களால் வடிக்கவேண்டியிருக்கும்.

அப்படிப்பட்ட கிராமங்களைப் பார்க்கவும் அந்த மக்களின் துயரங்களைக் குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் கேட்கவும் தேர்தல் பரப்புரைக் காலங்கள் மட்டும் போதாது. அவ்வப்போது வடக்கு கிழக்கிற்கு அமைச்சர்கள் வரவேண்டும்.

# உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் வறுமை ஒழிக்கப்பட்டு அபிவிருத்தி நோக்கி நகரலாம்

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபா தெரிவிப்பு

(சர்ஜூன் லாபீர்)



உள்ளூர் உற்பத்தியாளர்களையும் அவர்களின் உற்பத்திப் பொருள்களையும் ஊக்குவித்தல்மற்றும்சந்தைவாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் நாட்டின் வறுமை இல்லாதொழிக்கப்பட்டு நாடு அபிவிருத்தி அடையும் என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

அண்மையில் சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சமுர்த்தி அபிமானி' வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் மற்றும் சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது அந்நிகழ்வுக்குதலைமையேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

ஒவ்வொரு முஸ்லிம்,தமிழ் பண்டிகைகளையும் சிறப்பிக்கும் முகமாக இவ்வாறான சந்தைகளைக் கொண்டு ஆரம்பம் செய்வது வழமையான விடயமாகும்.

இச்சந்தையில்எமதுஉள்ளூர்உற்பத்திகளை விற்பனைக்காக காட்சிப்படுத்தியுள்ளோம். அந்த உள்ளூர் உற்பத்திகளை ஊக்கிவிப்பதற்கான வாய்பாக இதனை அமைத்திருக்கின்றோம். அதனடிப்படையில் நாம் வாடிக்கையாளர்கள் எனும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அதுபோல் இந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்தி உற்பத்தி திறன்மிக்கதாக்குவதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம்.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்தின் மூலமாக இவர்களை பரீசீலனை செய்து அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி இருக்கின்றோம்.

சமுர்த்தி திட்டம் மட்டுமன்றி உற்பத்தி திறன் சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏனைய துறைசார்ந்த உத்தியோகத்தர்களையும் இதில் இணைத்து அவர்களை மேற்பார்வை செய்து இவ் உற்பத்தியாளர்களுக்கு அறிவுரைகளையும் ஆலோசனைகளும் வழங்கி இருக்கின்றார்கள்.

இவ்வாறு அவர்களின் உற்பத்திகளை மேம்படுத்தகூடியசகலசெயற்பாடுகளையும் எமது காரியாலயத்தின் ஊடாகவும் ஏனைய நிறுவனங்களின்ஊடாகவும்அறிவுறுத்தல்களை வழங்கி சிறப்பாக செய்து இருக்கின்றோம்.

எனவே எமது மக்களுக்காக உற்பத்தி செய்யபட்ட இந்தப் பொருள்களை நாங்கள் கொள்வனவு செய்வதன் ஊடாக அவர்களை ஊக்குவிக்க முடியும். என்பதோடு அவர்களை விளம்பரம் செய்து நிரந்தர சந்தைவாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கலாம் என்பதனையும் தெரிவித்து கொள்கின்றேன்.

இங்கு வருகை தந்திருக்கின்ற சமூகமட்ட அமைப்புகளின் தலைவர்கள் இந்த உற்பத்தியாளர்களைஊக்குவித்து அவர்களின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு உதவ முன்வரவேண்டும்.

இதற்கு மேலதிகமாக இந்த நிகழ்வில் சிப்தொர புலமைப்பரிசில் பெறுவதற்கு மாணவர்கள் கலந்து கொண்டு இருக்கின்ர்கள். சமுர்த்தி திணைக்களமானது வறுமை ஒழிப்பு என்கின்ற விடயத்தை மையப்படுத்தி பல்வேறுபட்ட செயற்திட்டங்களை பல வருடங்களாக முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றது.

இன்று நாம் வறுமை என்று பேசிக் கொள்கின்றோம். அதன் மூலமாகத்தான் பொருளாதார சிக்கல்கள் சமூகத்திலே எழுகின்றன. சில பிறழ்வான நடத்தைகள் மேலோங்குகின்றன. குற்றத்தை செய்கின்ற மனப்பாங்கு அதிகரிக்கின்றது.சட்டங்களுக்கு கட்டுப்படாத சமூகம் என்றெல்லாம் நாங்கள் வறுமைய காரணமாக காட்டி அதன் விளைவுகளாக பேசிக்கொள்கின்றோம்.

எனவே நாம் வறுமையில் இருந்து மீள்வதாக இருந்தால் அதற்கான ஒரேயொரு வழி கல்வியை மட்டும் குறிப்பிட முடியும். கல்வி மேம்பாட்டின் மூலமாக வறுமையை நிரந்தரமாக நீக்க முடியும்.

வேறு செயற்பாடுகளும், அபிவிருத்திகளும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தாக்கு பிடிக்குமே ஒளிய கல்வியைப் போன்று நீடித்து நிலைத்து நிற்க முடியாது.

கல்வி என்பது நாம் எல்லோரும் குறிப்பிடுவது போல வறுமை என்கின்ற இருளை அகற்றுகின்ற ஒளி ஆகும். சூரியன் உதிக்கின்ற போது எவ்வாறு இருள் மெல்லமெல்ல விலகுகின்றதோ அது போல கல்வி மேம்படுகின்ற போது குறித்த சமூகத்தில், பிராந்தியத்தில், நாட்டில் இருந்து வறுமையானது ஒளிந்துபோய் நாடு அபிவிருத்தி அடையும் என குறிப்பிட்டு இருந்தார்.

இவ் சமூர்த்தித் திட்டத்தின் ஊடாக அதனுடைய பயனாளர்கள் சேமித்த பணத்தினைக்கொண்டு அவர்களின்உண்டியல் மூலமான பணங்களில் இருந்து தான் இந்த புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. உங்களைப் போல பல மாணவர்கள் இந்த புலமைப்பரிசில்களுக்காக ஏங்கிக் கொண்டு இருந்தாலும் நீங்கள் அதிர்ஸ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டு இருகின்றீர்கள்.

எனவே இவ்வாறான மக்களின் பணத்தில் இருந்து எதற்காக வழங்கப்படுகின்றது என்று சிந்தித்துஉங்களைவளப்படுத்திஎதிர்காலத்தை வெற்றி கொள்ளக்கூடிய சமூகத்திற்கு தலைவர்களாக கூடிய ஆளுமைகளை மாற்றுவதற்காக வேண்டித்தான் இவ்வாறான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

எனவே மாணவர்கள் நன்றாக கல்வி கற்று வெற்றிகரமான அடைவை அடையக்கூடியவர்களாக மாறவேண்டும்.

கல்வி என்பதன் ஊடாக பரீட்சையில் சித்தியடைவது மாத்திரமல்லாது ஆளுமை விருத்தி ,ஒழுக்க விழுமியங்கள் ,சவால்களை எதிர்கொள்ள கூடிய திறன் அபிவிருத்தி என்கின்ற விடயங்களை எல்லாம் உள்வாங்கியதாக எமது கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

இந்நிகழ்வில்அம்பாறைமாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன்,சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எ.பி.எம் ஓஹசைன்,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம் நளீர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் களை கட்டிய வியாபாரம்





தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் வியாபாரம் களை கட்டியுள்ளதுடன், நகரில் அதிக சனநெரிசல்களையும் அவதானிக்க முடிகிறது.

2025 ஆம் ஆண்டு தமிழ் - சிங்களப் புத்தாண்டானது எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதனை கொண்டாடும் முகமாக வவுனியா நகரிற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்புபண்டங்களைகொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.

கடந்த வருடத்தை விட இம் முறை புத்தாண்டு வியாபாரம் களைகட்டியுள்ளதுடன், மக்கள் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு ஆர்வத்துடன் தயாராகி வருவதையும் அவதானிக்க முடிந்தது. 100



## சமூக ஊடகங்களில் ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதம்பாவை தேசியப் பட்டியல் ஊடாகக் கொடுத்து முஸ்லிம் சமூகத்தைக் கௌரவப்படுத்தியுள்ளோம்.

இனவாத பிரச்சினைகளை இந்த நாட்டில் உருவாக்க தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஒருபோதும் இடமளிக்காது. 2019இல் ஈஸ்டர் தாக்குதலால் 250க்கும் மேற்பட்ட உயிர்கள் பழியானதுடன் 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இதனால் முஸ்லீம் சமூகம் பெரும் துன்பத்தை எதிர்கொண்டது. கடந்த கால ஆட்சியாளர்கள் நாட்டை நாசப்படுத்தியுள்ளார்கள். எரிபொருள் இல்லை, எரிவாயு இல்லை, கடன் சுமை எனப் பல இடர்களை சந்திக்கவேண்டி இருந்தது. தற்போது பொருளாதாரத்தை மீட்டுள்ளோம். இதனையடுத்து அரச சேவையை மீள் எழுச்சி பெறவும் மக்களுக்கு திறந்த சேவைகளை வழங்கவும் அரச துறையில் சம்பள உயர்வை ஏற்படுத்தியுள்ளோம். ரூபா 38,000 பெற்ற ஒருவர் ரூபா 63,000 வரை பெறுகிறார் ரூபா 54,000 பெற்ற வைத்தியர் ரூபா 94,000 பெறுகிறார். இதற்காக இந்த வருடம் 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 30,000 உத்தியோகத்தர்களை அரச துறையில் ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது போன்று அரசாங்க கொடுப்பனவுகளான அஸ்வசும நலன்புரி சேவை, முதியோர், சிறு நீரக கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளள. மேலும் நான்கு இலட்சம் புதிய 'அஸ்வெசும' பயனாளர்களை இணைக்கவுள்ளோம் என்றார்.




# தமிழில் முறைப்பாடுகளை வழங்க தொலைபேசி என்.

தமிழ் மொழியில் முறைப்பாடுகளை வழங்குவதற்கு 107 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளமுடியும்ன பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இந்த பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் தமிழ் மக்களுக்காக சேவையில் இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்கள் தங்களது தாய் மொழியில் இலகுவாக தங்களது முறைப்பாடுகளை வழங்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இந்து மக்களின் உணர்வுகளை பிரதமர் காயப்படுத்தியுள்ளார்

## ஸ்ரீ காந்தா காட்டம்



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் இந்து மக்களின் உணர்வுகளை கீறி காயப்படுத்தியுள்ளார். அதற்காகமக்களிடம்மன்னிப்பு கேட்க வேண்டும் என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

எதிர்வரும் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது தேர்தல் சட்டம் அமுலில் இருக்கிறது. தேர்தல் சட்டங்களை கடைப்பிடிக்குமாறு தேர்தல் திணைக்களம் சகல கட்சிகள் சுயேச்சை குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டார்.

அவர் கலந்துகொண்ட தேர்தல் பிரச்சார கூட்டங்களில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற போது, ஆலயத்தினுள் அதிரடியாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் புகுந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்குஇடையூறுவிளைவித்துள்ளார்.

பிரதமரின் பாதுகாப்புக்காக வந்தவர்கள், காலணிகளோடு ஆலய வளாகத்தில் புகுந்துள்ளார்கள். அது இந்து மக்களுக்கு மிகப் பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மாவிட்டபுரத்துக்கு சென்றது மிக மலிவான தேர்தல் பிரசாரத்துக்காகவே, மாவிட்டபுரத்துக்கு கடந்த காலங்களில் பல அரசியல்வாதிகள் வந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கவில்லை.

பிரதமரின் அதிரடி வருகையால் பக்தர்களின் வயிற்றெரிச்சலை தான் பெற்றுச் சென்றுள்ளனர். இந்த மலிவான அரசியலுக்கு நாம் கடுமையான கண்டனங்களை தெரிவிக்கிறோம்.

இந்து மக்களின் உணர்வுகளை கீறி காயப்படுத்தியுள்ளார், பிரதமர். தனது செயலுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இதற்காக பிரதமர் என்ன சொல்லப்போகிறார் ?

அதேபோன்று காரைநகர் மற்றும் நீர்வேலி பகுதியில் ஆலய வளாகத்தில் மேடை அமைத்து, தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் பிரதமர் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறான மலிவான அரசியலை நாட்டின் பிரதமர் செய்யக்கூடாது. இங்குள்ள எடுபிடி அரசியல்வாதிகள், சின்ன பிள்ளை அரசியல் செய்பவர்களின் சொல்லை கேட்டு நடக்கக்கூடாது.

வடக்கை நோக்கி பல அரசியல்வாதிகள் உள்ளூராட்சி தேர்தலுக்காக படையெடுத்து வருகின்றனர். அவர்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளைமததலங்களில்மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். மலிவான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் தமது கடமைகளை சரியாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.




# மாணவருக்கு சரியான துறையை தெரிவுசெய்யப் பழக்கவேண்டும்

## வடக்கு ஆளுநர் இடித்துரைப்பு

முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பித்ததாக கேள்விப்பட்டிருக்கின்றேன். எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலைமைதான் வரப்போகின்றதோ என்று பல அதிபர்கள் எனக்குச் சொல்கின்றார்கள். சில பாடங்களுக்கு எங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் போகப்போகின்றது.

மாணவர்களை இப்போதே சரியான துறைகளைத் தெரிவு செய்வதற்குரிய வழிகாட்டல்களை வழங்காவிடின் பாரதூரமான விளைவுகளை நாம் சந்திக்கவேண்டியிருக்கும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரயின் 150 ஆவது ஆண்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. சனிக்கிழமை மூன்றாம் நாளின் காலை அமர்வில் - சாதனையாளர் கௌரவிப்பில், வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அபிராமி இராஜதுரை கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்கள் பாண்ட் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். தேசியக் கொடி, கல்லூரிக்கொடி, 150 ஆவது ஆண்டு நிறைவுக் கொடி என்பன ஏற்றப்பட்ட பின்னர் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், நான் சிறுவனாக படித்துக்கொண்டிருந்தபோது உங்கள் பாடசாலையின் ஹொக்கி அணி பிரபலமாக இருந்தது எனக்கு இப்போதும் நினைவிருக்கின்றது.

உங்கள்பாடசாலைநீண்டபாரம்பரியத்தைக்கொண்டிருக்கின்றது. அர்ப்பணிப்பான அதிபர்களால்தான் இடப்பெயர்வுகள் உள்ளிட்ட பல சவால்களைச் சந்தித்தாலும் பாடசாலை தலைநிமிர்ந்து நிற்கின்றது.

வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மாணவர்கள் அனுமதி குறைவடைந்து செல்கின்றது. எமது சனத்தொகை முன்னரைவிட பல மடங்கு வேகத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. பிறப்பு வீதம் குறைகின்றது. இதற்கும் அப்பால் வெளிநாட்டு மோகம் எம்மவரிடையே இன்றும் இருக்கின்றது. இவை எல்லாம் இணைந்து எமது மாகாணப் பாடசாலைகளின் மாணவர் அனுமதியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

எங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறான துறைகளைத் தெரிவு செய்யவேண்டும் என்ற போதுமான வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும். விஞ்ஞான, கணித துறைகளைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்கின்றது. அவ்வாறு விஞ்ஞான மற்றும் கணிதத் துறைகளைத் தெரிவு செய்தாலும் அவர்கள் மருத்துவர்கள் அல்லது பொறியலாளர்கள் என்ற நிலையைத்தான் தெரிவு செய்கின்றார்களே ஒளிய அதற்கு அடுத்த நிலையிலுள்ள துறைகளைத் தெரிவு செய்யவில்லை.

இதனால் எமது மாகாணத்தில் இருக்கின்ற துணை மருத்துவ வெற்றிடங்கள் உள்ளிட்ட பலவற்றை நிரப்புவதற்கு வேறு மாகாணங்களிலிருந்து ஆள்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

புதிதாக நியமனம் பெற்ற இளம் அதிபர்கள் பலரும் அவர்கள் பொறுப்பேற்ற பாடசாலைகளில் சொல்லிக்கொள்ளதக்களவு மாற்றங்களை உருவாக்கி வருவதாக கல்வி அமைச்சின் செயலர் எனக்கு கூறியிருந்தார். அதனை வரவேற்கின்றேன். அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால், சிறந்த தலைமைத்துவத்தை பாடசாலைக்கு வழங்கினால் முன்னேற்றத்தை நாம் கண்ணூடாகக் காணலாம்.

எங்களுடைய சமூகத்தில் வழிகாட்டிகளாக இருந்தவர்களின் பாதைகளை நாங்கள் பின்பற்றத் தவறுவதனால்தான் இன்றைய இளைய சமுதாயம் பிறழ்வான பாதையை நோக்கிச் செல்கின்றது. மாணவர்கள் கூடுதலாக பாடசாலையை விட்டு இடைவிலகும் சூழலும் ஏற்படுகின்றது. இதைச் சீர் செய்யத் தவறினால் நாம் எதிர்கால சந்ததிக்குச் செய்யும் துரோகமாகும். இதைமாற்றும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கின்றது.

மாணவர்களுக்கு இலக்கு இருக்கவேண்டும். கல்வியில் எதைச் சாதிக்கப்போகின்றோம் என்ற தூர நோக்கு இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களை கல்வியில் வளப்படுத்துவதுடன் மாத்திரமல்லாது தலைமைத்துவத்தையும் வளர்த்துவிடவேண்டும். - என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கான கௌரவிப்பையும் ஆளுநர் வழங்கிவைத்தார். 316

# தமிழருக்கு நீதியை வழங்காது அரச அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி துஸ்பிரயோகம் செய்கின்றது

## அமைச்சர் சந்திரசேகரனுக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் பதிலடி.

தேர்தல் சட்ட விதிகளுக்கும் எமது மக்களின் சமய விழுமியங்களுக்கும் மதிப்பளிக்காது அரசாங்கம் என்ற அதிகாரப்போக்கில் தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டினார்.

நீர்வேலியில் பிரதமர் கலந்துகொண்ட பிரசார மேடையில் தன் தொடர்பில் பெயர் குறிப்பிட்டு நீண்டதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்னையில் -

நீர்வேலி வாய்க்கால் தரை பிள்ளையார் கோவில் முற்றத்தில் கோவிலின் முகப்பினை மறைத்து மேடை அமைத்து தேசிய மக்கள் சக்தி பிரச்சாரக் கூட்டத்தினை நடத்தியது. அப் பிரசாரம் தேர்தல் சட்ட விதிமுறை மீறல் என்பதை நேரில் தேர்தல் முறைப்பாட்டு அலுவலர்கள் முன்சுட்டிக்காட்டினேன். அதுபற்றிய முறைப்பாடுகளையும் மேற்கொண்டேன். சட்ட, சம்பிரதாய மற்றும் எமது சமய ஒழுக்க விதிகளின் அடிப்படையில் ஆலய வளாகத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை எந்த கட்சியும் மேற்கொள்ள முடியாது. வீதியால் செல்பவர்கள் கூட கோவிலை தரித்து செல்லவேண்டும். ஆகவே கோவிலை மறைத்து அரசியல் பிரசாரம் செய்வது என்பது எம்மை அதிர்ப்திக்குள்ளாக்குகின்றது. இவைகளே நாம் எதிர்ப்பினை மேற்கொள்ளக் காரணம்.

தேர்தல் முறைப்பாடுகளையடுத்து தேர்தல் அதிகாரிகள் கூட்ட ஏற்பாட்டாளர்க்கு வழங்கிய அறிவுறுத்தல்களை அரசாங்கம் என்ற அதிகார மமதையிலேயே பிரதமர் தலைமையிலானவர்கள் மீறினர். அச் சட்ட மீறலுக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கினர். அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தியை நாட்டிலுள்ள தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் கட்டுப்படுத்த முடியாதுள்ளனர் என்பதுவே நடைமுறை நிதர்சனமாகவுள்ளது.

நான் இவ்விடத்தில் தலையிட்டமை தொடர்பில், பெயர் குறிப்பிட்டு அமைச்சர் சந்திரசேகரன் அவர்களால் மேடையில் பகிரங்கமாக விமர்சிக்கப்பட்டிருந்தேன். இங்குகூறப்பட்ட விமர்சனத்திற்கு பதிலளிக்குமுகமாக ஒரு சிலவற்றையாவதுநான்குறிப்பிட்டாகவேண்டியுள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்களையும் அரசியல் அராஜகங்களையும் மேற்கொண்ட போது எதிர்த்து சொல்லிலும் செயலிலும் இயங்கியுள்ளேம். அதற்காக இன்றும் எனக்கு எதிரான வழக்குகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக நிலுவையில் உள்ளன. எமது மக்களை இராணுவ அதிகாரம், திணைக்கள அதிகாரம் கொண்டு அடக்க முற்பட்ட போதும் நாம் போராடியுள்ளோம்;. எவரினதும் அச்சுறுத்தல்களுக்கும் நாம் அஞ்சமுடியாது. ராஜபக்சாக்கள் எம் மக்கள் மீது தொடர்ச்சியாக ஒடுக்குமுறையை பிரயோகித்தனர். ஒருகட்டத்தின் பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான கட்சியும் அரசாங்கத்திற்கு வெளியே நின்று ராஜபக்சாக்களை எதித்தார்கள். தங்கள் கட்சியின் கொள்கைக்கும் எமது தமிழ்த் தேசிய கொள்கைக்கும் வேறுபாடு காணப்பட்ட போதும் அரச அடக்குமுறையை தாக்குப் பிடிப்பதற்காக கொழும்பில் செயற்பாட்டாளர்களாக நாம் தொடர்புகளை பேணவேண்டியிருந்தது.

போரின்போதும் பேரின் பின்பாகவும் இராணுவமயமாக்க சூழலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உயிர் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது நாம் தமிழ்த் தேசிய நிலைப்பாடு உடையவர்களாகவும் நீங்கள் இடதுசாரி நிலைப்பாடு உடையவர்களாகவும் இணைந்து போராடினோம். இது தங்களுடன் மட்டுமல்ல. அரச அடக்குமுறைக்கு எதிரான உணர்வில் இருந்த பல சிங்கள முஸ்லிம் தலைவர்களுடனும் செயற்பாட்டாளர்களுடனும் ஊடாட்டத்தினை நான் பேணியுள்ளேன். இவ் ஊடாட்டம் ஆட்சி மாற்றம் மட்டுமல்ல. அரசொன்றின் இனவாதத்தினை வெளிப்படுத்துவதாகும். மனித உரிமைகள் ரீதியில் தொடர்பு படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் ஆட்சிக்கு வருவீர்கள் என நான் கனவிலும் நினைக்கவில்லை.

நீங்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் எனக்கு பேச அவசியம் ஏற்படவில்லை. ஆனால் ஆட்சிக்கு வந்த நீங்கள் எமது மக்கள் மீதான ஒடுக்கமுறைக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அரசியல் தீர்வு ரீதியில் பொறுப்புச் சொல்வதுடன் நிரந்தர தீர்வையும் முன்வைக்கப்பொறுப்புடையவர்கள் என்பதை அவதானிக்கின்றோம்.

நீங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் அரச ஒடுக்குமுறைக்கு எதிராக கொண்டிருந்த நிலைப்பாடுகளில் இருந்து ஆட்சிக்கு வந்த பின்னர் தடம்மாறி பயணிக்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு நிலைமையை சகஜமாக்குதல் என்ற மக்களை சகித்துவாழுதல் என்ற உத்திக்குள் தள்பவர்களாக உள்ளீர்கள்.

உண்மைக்குப்புறம்பானதேர்தல்வாக்குறுகளையும் தகவல்களையும் கூறுகின்றீர்கள். தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைகளுக்கு தீர்வை வழங்க மறுக்கின்றீர்கள். நான் எமது மக்களுக்கு எதிராக அரசுமேற்கொண்ட பாரதுரமான மனித உரிமைகள் குறித்த சாட்சியங்களை பதிவு செய்வதில் கூட தங்களுடன் இணைந்து பணியாற்றினேன். இவ்வாறாக எல்லாவற்றினையும் அறிந்த நீங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதுரமான மனித உரிமை மீறல்களுக்கு அரசாக தங்கள் பொறுப்புச் சொல்லாது காலத்தைக் கடத்துகின்றீர்கள்.



அரச ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வு எம்மை ஒரு புள்ளியில் அன்று அரசியலுக்கு அப்பால் இணைத்தது. அமைச்சர் சந்திரசேகரன் ஊடாக லலித் மற்றும் குகன் தோழர்களும் எனக்கு அறிமுகமாகினர். ஏன் ஜனாதிபதி அநுர கூட அரச ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பு ஊடகப்பணி நிமிர்த்தமாக தொடர்பிலிருந்தவர்.

வலிகாமம் கிழக்கில் ஆவரங்காலில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்டமைக்கான நீதிமன்ற சாட்சியமாக முன்னாள் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல உள்ளார். ஏன் இன்னும் நடவடிக்கை இல்லை. காணாமலாக்கப்படுதலில் படையினர் காட்டிக்கொடுக்கப்பட்டு விடுவர் என அரசாங்கம் அஞ்சுகின்றதா?

வரலாற்று ரீதியில் தமிழ் மக்களாகிய நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். நீங்கள் இனவாதத்தை ஒழிப்பதாக சொன்னீர்கள். சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதாக சொன்னீர்கள். அரச அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி என்றீர்கள். பெரும் வெற்றியைச் சந்தித்துள்ள தங்கள் அரசாங்கம் இவற்றை செயற்பாட்டில் காட்டாது தற்போது செல்வாக்கிழந்துள்ள நிலையில், அதுபற்றி கேள்வி எழுப்பும்எம்மையும்நடவடிக்கையினையும்குறைத்த மதிப்பிடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கின்றேன் இவ்வாறு முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# நுரைச்சோலை வீட்டுத் திட்டம் விரைவில் பகிர்ந்தளிக்கப்படும்

## ஜனாதிபதி பகிரங்க அறிவிப்பு

(அபு அலா)

சவூதி அரசால் அக்கரைப்பற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தை மிக விரைவில் இப்பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிப்பேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபை தேர்தலில் போட்டியிடுகின்ற தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல வருடங்களுக்கு முன்னர் இருந்த சவூதி அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளைக் கொண்ட இந்த வீட்டுத் திட்டத்தின் நன்மையை மக்கள் இன்னும் அடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் என்னிடம் மிகவும் கவலைப்பட்டு பேசினார். அத்துடன் இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகளை பயனாளிகளுக்கு வழங்குமாறும் சவூதி தூதுவர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குறித்த வீட்டுத்திட்டத்திலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அந்த வீடுகளை மிக விரைவில் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபை உறுப்பினருக்கு அடையாள அட்டைகள் வழங்கல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள்வழங்கும்நிகழ்வுசமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ. சம் சுதீன் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சாய்ந்தமருதில் உள்ள 17 பிரிவுகளின் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கி வைத்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் மற்றும் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் சங்கத் தலைவர்கள் உட்பட சங்க உறுப்பினர்கள் 17 பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன.

சமுர்த்தி வங்கிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் இவ்வாண்டின் (2025) முதலாவதாக அம்பாறை மாவட்டத்திலேயே அதிலும் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கே வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# புத்தளம் மாவட்டத்தில் பிரச்சாரப் பொதுக்கூட்டம்

## ஹிஸ்புல்லாஹ் பங்கேற்பு

(சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் புத்தளம் மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் புத்தளம் மாநகர சபையின் முதன்மை வேட்பாளரும், மு.கா. உயர்பீட உறுப்பினருமான ரணீஸ் பதுர்தீன் தலைமையில் புத்தளத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான ஏ.என்.எம். ஜௌபர் மரைக்கார், கே.எம். ரிழ்வான், பஸீர், மு.கா புத்தளம் மாநகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துசிறப்பித்தனர்.





# சந்திப்பு

புத்தளம் விஜயம் செய்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் புத்தளம் நகர அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வியியல் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ் தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றார்.

இந்நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான ஜௌபர் மரைக்கார், ரிழ்வான் மரைக்கார், மாநகர சபை தலைமை வேட்பாளர் ரணீஸ் பதுர்தீன், மாவட்ட இளைஞர் அமைப்பாளர் நஸ்ஹத்மரைக்கார் உட்பட முன்னாள் நகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா, பூவரசன்குளத்தில் கோடாவுடன் ஒருவர் கைது

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கோடாவுடன் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயில் புளியங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து 80 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா பெரலில் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

100



# உள்ளாட்சி தேர்தல் 2025

# 18 வட்டாரங்களையும் கைப்பற்றும் ஆணை தாருங்கள் குட்டி சிங்கப்பூராக வலி.தெற்கை மாற்றியமைப்போம்

## திடமாகக் குறிப்பிடுகிறார் தமிழரசு வேட்பாளர் டினேஸ்

18 வட்டாரங்களையும் வெற்றிபெறுகின்ற ஆணையை மக்கள் எமக்கு வழங்குவார்களாக இருந்தால் எமது பிரதேசம் குட்டி சிங்கப்பூராக வளர்ச்சியுறும் அதற்குரிய திட்டங்கள் எம்மிடம் ஏற்கனவே உள்ளன. அதனை நாம் நிச்சயம் நடைமுறைப்படுத்துவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வலி. தெற்கு பிரதேச சபையின் சங்குவேலி வட்டார வேட்பாளர் லயன் க.டினேஸ்.

சங்குவேலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இங்கு அரசகட்சியில் போட்டியிடுகின்ற பலரும் தெரிவிக்கின்ற விடயம் அரசு மத்தியில் ஆட்சிப்பீடத்தில் உள்ளது. நீங்கள் பிரதேச சபையையும் எமக்கு வழங்குவீர்களானால் சிரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வோம் என்பதாகும். உண்மையாள விடயம் அதுவல்ல. அவர்கள் கூறுவது சுத்தப் பொய். மக்கள் நீங்கள் தெளிவாக இருக்கவேண்டும். எமது சபை மற்ற சபைகள் போன்று வங்குரோத்தான சபை அல்ல.

மித மிஞ்சின வருமாணம் எம்மிடம் உள்ளது. 2011 ஆம் ஆண்டு தவைவராக பிரகாஷ் இருந்த காலத்தில் செய்த அபிவிருத்தி பற்றி அனைவரும் அறிவார்கள். நாங்கள் வருமாணம் ஈட்டுகின்றோம். எமக்கு மத்தியின் வருமாணம் தேவையில்லை. நாங்கள் நாங்களானவே ஆள விரும்புகிறோம். அதற்குரிய ஆணையையே உங்களிடம் வேண்டுகின்றோம்.

தலைவர், பிரகாஷ், ஓர் இளைஞனாக - மருதனார்மடத்தை உருவாக்கிய - அபரிமிதமான - செயற்பாட்டை எண்ணி தற்போதும் நான் மெய்சிலிர்த்திருப்பேன். மருதனார்மடத்தை பெயர் சொல்ல வைத்த பெருமைக்கு சொந்தக் காரர் பிரகாஸ். ஒல்லாந்தர் காலத்து சந்தை என்று பெருமையாகப் போற்றப்பட்ட சுன்னாகம் சந்தையை மாற்றியமைப்பதுதான் பிரகாஷின் ஆரம்ப திட்டம். அதற்கு சில வர்த்தகர்களின் ஒத்துழைப்பு போதாமையின் காரணமாகவே மருதனார்மடம் சந்தை மாற்றியமைக்கப்பட்டது.

தற்போது வெறும் ஒரு லட்சம், இரண்டு லட்சம் ஒப்பந்தம் போன மருதனார் மடம்சந்தை கோடி பெறுமதிக்கு சென்றுள்ளது. அந்த வருமாணத்தில் கண் வைக்கப் பலரும் தலைப்பட்டுள்ளார்கள். அதனால்தான் மத்தியோடு இணைந்த ஆட்சி என்று கதைவிட ஆரம்பித்துள்ளார்கள்.

சிறிதரன் எம்.பி. வன்னியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்த கருத்தையும் நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுகினேன்.

எமது ஊராட்சி மன்றங்களை நாமே ஆளவேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு நீங்கள் ஊராட்சிகளை ஒப்படைப்பீர்களானால், நாளை அதன் ஒப்பந்தங்கள் தென்னிலங்கையின் மூன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். கடை குத்தகை விளம்பரங்களும் அவ்வாறே தேசிய நாளிதழ்களில்தான் பிரசுரிக்கப்படும். ஆகவே, பெரும்பான்மை இனர்த்தைச்சார்ந்த அப்புகாமியோ, குப்புசாமியோவின் ஆளுகையின்கீழ்தான் எமது வருமாணங்கள் செல்லும். அதையா நீங்கள் விரும்புகின்றீர்கள்?

நாங்கள் எம்மை நாமே ஆளவேண்டும். அதையே அனைவரும் விரும்புவர். எமது தலைவர் பிரகாஷிடம் பல திட்டங்கள் உள்ளன. தம்புள்ள சந்தை போன்று 24 மணித்தியாலமும் இயங்கு நிலையில் உள்ள ஒரு சந்தையாக மருதனார்மடம் மாற்றம்பெறும். எமது வருமாணம் முழுமைபாக நாமே பெற்று எமது பிரதேச அபிவிருத்திக்கே முன்னுரிமை கொடுப்போம். - என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரகாஸ் -

உங்களுடைய ஆணையை முழுமையாக எதிர்பார்க்கிறோம். முழுமையான பலத்தை எமக்கு நீங்கள் நல்குவீர்களானால்தான் - 2011 இல் சபை இருந்தமை போன்ற நிலைமையை ஏற்படுத்துவீர்களானால் நிச்சயம் குட்டி சிங்கப்பூராக - வலி.தெற்கு பிரதேசத்தை மாற்ற முடியும் - 24 மணி நேரமும் சேவையை வழங்கும் ஓர் நிலையமாக - வடக்கின் பொருளாதார மத்திய நிலையமாக - மருதனார்மடம் மாற்றம்பெறும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். - என்றார்.

# பிக்குகளுக்கென தனியானதோர் அணியை உருவாக்கி பேரினவாதத்தை நிறுவனமயப்படுத்தியது ஜே.வி.பியே

## பொ. ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

தென்னிலங்கை அரசியலும் பௌத்தமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தென்னிலங்கை அரசியலில் பௌத்த சிங்கள பேரினவாதம் கோலோச்சி வந்துள்ளது. ஆனால், அதனை நிறுவனமயப்படுத்தி பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியை உருவாக்கியது ஜே.வி.பி மாத்திரமே.

ஜே.வி.பி இன் முன்னணி அமைப்புகளில் மகளிர் அணி, உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அணிகளுடன் மூன்றாவதாக பிக்குகளுக்கென்று தனியானதொரு அணியும் உருவாக்கப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்திய விஸ்தரிப்புக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தமிழின விரோதப ;போக்கை சிங்கள மக்களிடையே இந்துப் பிக்குகள் அணியின் மூலமே ஜே.வி.பி விதைத்தது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியப் பேரவையின் யாழ் மாநகரசபை வேட்பாளர்களின் அறிமுகக்கூட்டம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - அமெரிக்கா இலங்கையில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு விதித்துள்ள அதியுயர்வரியை ஜனாதிபதி அனுரகுமாரதிஸநாயக்க கொரோனாவுக்கும் சுனாமிக்கும் நிகரானதாக ஒப்பிட்டுப் பேசியுள்ளார். இந்தப்பொருளாதார நெருக்கடியை நாம் தேசமாக ஒருங்கிணைந்துஎதிர்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கையைச்சுனாமிதாக்கியபோது நாடுதழுவிய ரீதியில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் செய்துகொள்ளவிருந்த ஒப்பந்தத்தை அடியோடு ஜே.வி.பி நிராகரித்துப் பேரணிகளைக்கூட நடத்தியது.

அப்போது சுனாமி நெருக்கடியை தேசமாக எதிர்கொள்ளவிடாது ஜே.வி.பியை தடுத்தது தமிழின விரோதப்போக்கேயன்றி வேறென்ன?

ஜே.வி.பி தன்னை வெளிப்பார்வைக்கு ஓர் இடதுசாரி அமைப்பாகக்காட்டிக்கொண்டாலும் அது உண்மையான மார்க்சியக் கட்சியாக ஒருபோதும் இருந்ததில்லை. ஆரம்பத்தில் மார்க்சியத்தினதும் சிங்களத் தேசியவாதத்தினதும் கலவையாக இருந்த ஜே.வி.பி பின்னர் முழுமையாக சிங்கள தேசியவாதக் கட்சியாகவே மாறியது.

சமாதானப் பேச்சுகளில் நோர்வேயின் மத்தியஸ்தத்தை எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரங்களை முன்னெடுத்தது. இராணுவத் தீர்வை வெளிப்படையாகவே முன்வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை போரைத் தொடங்குமாறு வலியுறுத்தியது.

இந்த கடும் தேசியவாதப் போக்கே ஜே.வி.பியை ஒரு சிங்கள தேசியச் சக்தியாக உருவெடுக்க வைத்து இன்று அதற்குப் பெரும் வெற்றியையும் தேடிக்கொடுத்துள்ளது.



இப்போது ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியை அணிந்துகொண்டாலும் அதன் உண்மையான முகம் மாறப்போவதில்லை. ஜே.வி.பியின் முகப்பூச்சை நம்பி தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜே.வி.பிக்கு வாக்களித்திருந்தார்கள். ஜே.வி.பி ஆட்சிபீடம் ஏறி இவ்வளவு மாதங்கள் கடந்த பின்னருங்கூட தமிழின விரோதச் செயற்பாடுகளில் தான், பட்டமைக்காகச் சிறுவருத்தங்கூட தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வ அணுகு முறைகள் எதனையும் வெளிக்காட்டவில்லை. தொடர்ந்தும் ஜே.வி.பியை நம்பாமல் உள்ளூராட்சித் தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஜே.வி.பியை அடியோடு நிராகரிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.


நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு
என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

# மன்னார் மாவட்டத்தில் பனம் பொருள் உற்பத்தியாளர்களுக்கான ஒன்றுகூடல்



மன்னார் மாவட்ட பனம் பொருள் உற்பத்தியாளர்களின் எதிர்கால சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னிறுத்திய திட்டமிடலுக்கான ஒன்றுகூடல் மாவட்ட யுஎண்டிபி நிறுவன நிதி அனுசரணையோடு உலகளாவிய சுற்றுச் சூழலியல் வசதி திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட தலைவர் யு. பெனில்டஸ். பீரிஸ் அவர்களின் ஏற்பாட்டில் ஒன்றுகூடல் சிறந்த முன்னேற்பாடுகளுடன் மன்னாரில் மிகச் சிறப்பாக நடத்துப்பட்டது.

மன்னாரின் தனியார் விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்கிழமை மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் இதன் ஒருங்கிணைப்பாளர் . தி. கணேஸ் பனம் பொருள் உற்பத்தியாளர்கள் இனிவரும் நாள்களில் காலத்திற்கேற்ப தம்மை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் நீங்கள் உங்களை சார்ந்திருக்கும் உள்ளூர் வளங்கலையும், அரசு வளங்களையும், அரசுசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்று நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது நோக்கமென தெளிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் ரமேஷ் , ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயவதனி , தி. கணேஷ் மற்றும் முகாமையாளர் கலாநிதி. சம்பா , வளவாளர் ஆகியோர் இந்நிகழ்விலே கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த ஒன்றுகூடலிலே 12 பதிவு செய்யப்பட்ட பனம்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இக்கூட்டத்தின் பிரதான நோக்கம் பனம் பொருள் உற்பத்தியாளர்கள் , சந்தைப்படுத்துவோர் , ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கிடையிலான புரிந்துணர்வுடன்கூடியபரஸ்பரஒன்றிணைப்பும் , கூட்டமைப்பாக உருவெடுத்தலுமான செயற்பாட்டை வலுப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டமைப்புக்குரிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தரவன் கோட்டை , ஓலைத்தொடுவாய் , புதுக்குடியிருப்பு , கீளியன் குடியிருப்பு , கட்டுக்காரன் குடியிருப்பு , தலைமன்னார் ஸ்ரேசன் , தலைமன்னார் கிராமம் , படப்படி , உயிலங்குளம் , புதுக்கமம் , முருகன் கோயிலடி, நடுக்குடா, கவையன்குடியிருப்பு, வட்டுப்பித்தான் மற்றும் மடு ஆகிய மன்னார்க்கிராமங்களில் இருந்து இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரிடையே இருந்து நிருவாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புனங்களி , கிழங்கு , வெல்லம் , பதநீர் , ஒடியல் , பனாட்டு , பனங்கட்டி இவற்றோடு பனையோலைக் கைவினைக் கலைஞர்களும் கலந்து கொண்ட இப் பெறுமதிமிக்க கூட்டத்தில் இருந்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அக்கருத்துக்களினூடாக எதிர்ப்படும் சகல பிரச்சினைகள், முரண்கள் பற்றியதான உரையாடல்களை வளவாளர்கள் வழிப்படுத்தியிருந்தார்கள்.

குழுச்செயற்பாடுகளாக பிரச்சினைகளை இனம் காணுதலும் தீர்வினை அணுகுதலும் என்ற பொருளில் இக்குழுச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவ்வாறே குழுக்கள் யாவும் தங்களை சுயபரிசோதனை செய்து தம்மீது காணப்பட்டதான குறைபாடுகளை தெளிவாகப்புரிந்து கொள்ளவும் இங்கு வாய்ப்பு ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தங்களின் பனை வள முகாமைத்துவம் என்ற பகுதியில் உற்பத்தியில் காணப்படும் கவனமின்மை , மற்றும் குறைபாடுகளை உடனடியாக நீக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொண்டார்கள்.

தொடர்ந்து வளவாளர்களுடைய ஆலோசனையின் படி தமக்கு ஏதுவான சந்தைப்படுத்தல் என்ற பகுதிக்குள் தம்மை தமது உற்பத்தி பொருள்களை சரியாக அழகாக , சுத்தமாக மேற்கொள்ளும் போது நல்ல சந்தை வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி தரம் பெறப்படும் என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்றிட்டத்தை முன்னெடுத்தார்கள்.

பின்பு இவ் ஒன்றுகூடல் பனம்பொருள் உற்பத்தியாளர்களுக்காக நடத்தப்பட்ட விசேட கருத்தாடல் கூட்டம் பிரயோசனத்தை வழங்கியதாகவும் இதுபோன்ற கருத்தமர்வுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமெனவும் பயனாளிகளால் விடுக்கப்பட்டது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பாடசாலை திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கு பள்ளிவாசல் முயற்சியால் தீர்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகள், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி அவர்களை வெள்ளிக்கிழமை மாநகர சபையில் சந்தித்து பிரதேச நலன்சார்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பில் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் டொக்டர் எம்.எச்கே. சனூஸ் காரியப்பர், செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ், உப செயலாளர் எசார் மீராசாஹிப், சபை உறுப்பினர்களான பேராசிரியர் எம்.ஐ.எம். ஹிலால், எம்.எஸ். பஸ்லுர் ரஹ்மான், உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தை மையப்படுத்தி பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக திண்மக்கழிவகற்றல், வடிகான் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் மூலோபாய திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் சில விடயங்களுக்கு சுமுக தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன. விஷேடமாக பாடசாலைகளின் திண்மக்கழிவுகளை அகற்றுவதில் நிலவும் அசௌகரியங்களை நிவர்த்தி செய்து, இலகுபடுத்துவதற்கான பொறிமுறைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு, தீர்வு காணப்பட்டன.

அதேவேளை, திண்மக்கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் மாநகர சபை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆணையாளர் இதன்போது தெளிவுபடுத்தினார். நிதி மற்றும் வாகனப் பற்றாக்குறை, மாநகர சபை எல்லைக்குள் குப்பைகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடங்கள் இல்லாமை, அட்டாளைச்சேனை, பள்ளக்காட்டில் கூட தற்போது குப்பைகளை கொட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை






ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இவற்றுக்கு மத்தியில் முடியுமானவரை திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும் என்று வலியுறுத்திய ஆணையாளர், இது விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகம் முன்னின்று மக்களுக்கு தெளிவூட்டி, விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆணையாளர் முன்வைத்த கருத்துகளுடன் உடன்பட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர், மாநகர சபையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு மக்களின் ஒத்துழைப்புகளை பெற்றுத் தருவதற்கு பள்ளிவாசல் நிர்வாகம் முன்னிற்கும் என்று உறுதியளித்துள்ளனர்.

இதன்போது சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலுக்கு குப்பைகளை தரம் பிரித்து சேகரிப்பதற்கான வர்ண குப்பைத் தொட்டிகள், ஆணையாளரால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சிப் பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்திக்காக நேரில் பார்வையிட்ட அமைச்சர்

(சுபேசன்)

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள தென்மராட்சி பொது விளையாட்டு மைதானத்திற்கு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே விஜயம் மேற்கொண்டு மைதான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார்.





தென்மராட்சிப் பொது விளையாட்டு மைதானம் நீண்ட காலமாக பயன்பாடு அற்றுக் காணப்படும் நிலையில் அது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அமைச்சர் தனது யாழ். விஜயத்தின் போது வருகை தந்திருந்தார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபைச் செயலாளர், தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டு பொது மைதான அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரிடம் சில வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

இதன்போது மைதான அபிவிருத்திக்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுத்துத் தருவதாக அமைச்சர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2025இல் வெளியிடப்பெற்றது